ஈ.கே.எம்.அப்துல் கனி மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,

ஏழாம் வகுப்பு ~ இரண்டாம் பருவம் ~ தமிழ்

கற்றல் கையேடு~2022~23

## இயல் - 1

### கவிதைப் பேழை :கலங்கரை விளக்கம்

**சரியான விடையைத் தேர்ந்தேடுத்து எழுதுக.**

1.வேயா மாடம் எனப்படுவது ---------------.

**விடை : சாந்தினால் பூசப்படுவது**

2.உரவுநீர் அழுவம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் **விடை : கடல்**

3.கடலில் துறை அறியாமல் கலங்குவன--------

**விடை : மரக்கலங்கள்**

4.தூண் என்னும் பொருள் தரும் சொல் -----

**விடை :மதலை**

**குறு வினா - விடை**

1.மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?

கலங்கரை விளக்கம்.

2.கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

இரவு நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்.

**சிறு வினா-விடை**

1.கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகள் யாவை?

கலங்கரை விளக்கம் வானம் விழாமல் தாங்கிக்கொண்டு இருக்கும் தூண் போல உள்ளது.அது ஏணி கொண்டு ஏறமுடியாத உயரமாக உள்ளது.சுண்ணாம்புபூசிய வானத்தைத் தொடும் மாடம் உடையது.இதில் இரவில் ஏற்றப்பட்ட விளக்கு , கப்பல்களை தன்னிடம் அழைக்கின்றது.

**சிந்தனை வினா**

கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளைத் தவிர வேறு யாருக்கெல்லாம் பயன்படும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

**மீனவர்கள் ,கப்பற்படை வீரர்கள், முத்தெடுப்பவர்கள்**

### கவிதைப்பேழை : கவின்மிகு கப்பல்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.இயற்கை வங்கூழ் ஆட்ட - அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்------ **விடை : காற்று**

2.மக்கள் ---------- ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர். **விடை : வங்கத்தில்**

3.புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது

**விடை: கடல்**

4.'பெருங்கடல்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை : பெருமை + கடல்**

5.இன்று +ஆகி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது. **விடை :இன்றாகி**

6.எதுகைஇடம்பெறாத இணை

**விடை:இரவு - இயற்கை**

**பொருத்துக.**

1.வங்கம் - கப்பல்

2.நீகான் - நாவாய் ஓட்டுபவன்.

3.எல் - பகல்

4.மாட ஒள்ளெரி - கலங்கரை விளக்கம்

**குறுவினா விடை**

1.நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?

உலகம் இடம்பெயர்ந்தது போன்று இருந்தது.

2.நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணைசெய்கிறது?

கப்பலை அசைத்து ஓட வைக்கின்றது.

**சிறுவினா விடை**

1.கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?

உலகம் இடம்பெயர்ந்தது போல கப்பல் உள்ளது. கடலின் நீரைப் பிளந்து செல்லும்.காற்று கப்பலை அசைத்து ஓட வைக்கின்றது.கலங்கரை விளக்கத்தின் ஒளியால் கப்பல் ஓட்டுபவர் கப்பலை ஓட்டுவர்.

**சிந்தனைவினா**

தரைவழிப்பயணம் , கடல்வழிப் பயணம் ஆகியவற்றுள் நீங்கள் விரும்புவது எது? ஏன்?

நான் விரும்புவது : கடல்வழிப் பயணம். கடலின் காட்சிகளைப் பார்த்து மகிழ கடல்வழிப் பயணமே சிறந்தது. எனவே, நான் கடல்வழிப் பயணத்தை விரும்புகின்றேன்.

### உரைநடை உலகம் : தமிழரின் கப்பற்கலை

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.தமிழரின் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது-------------. **விடை: ஓடம்**

2.தொல்காப்பியம் கடற்பயணத்தை ---------- வழக்கம் என்று கூறுகின்றது. **விடை : முந்நீர்**

3.கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி **விடை : சுக்கான்**

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1.கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் ------ என அழைக்கப்படும். **விடை : தொகுதி**

2.கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது---

விடை : நங்கூரம்

3.இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் -------- எனக்குறிக்கப்படும்.

**விடை : கண்ணடை**



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**பொருத்துக.**

1.எரா - அடிமரம்
2.பருமல் - குறுக்கு மரம்
3.மீகாமன் - கப்பலைச் செலுத்துபவர்
4.காந்த ஊசி - திசைகாட்டும் கருவி

**தொடர்களில் அமைத்து எழுது.**

1.**நீரோட்டம்** - கிணறு தோண்டும் போது **நீரோட்டம்** பார்ப்பர்.
2.**காற்றின் திசை** - **காற்றின் திசை**யில் கப்பல் செல்லும்.
3.**வானியல் அறிவு** -அவர் **வானியல் அறிவில்** சிறந்தவர் .
4.**ஏற்றுமதி** -**மீன்களை ஏற்றுமதி** செய்தனர்.

**குறுவினா விடை**

1.தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.
மரத்தின் உட்பகுதியைக் குடைந்து தோண்டியவை 'தோணி' எனப்பட்டன.
2.கப்பல் கட்டும்போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய் நார் (அ)பஞ்சு வைப்பதன் நோக்கம் என்ன?
மரப்பலகை உராய்ந்து தேய்மானம் ஏற்படாமல் இருக்கதேங்காய் நார் (அ)பஞ்சு வைத்தனர்.
3.கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களை க் கூறுக.
எரா,பருமல்,வங்கு,கூம்பு,பாய்மரம்.சுக்கான் , நங்கூரம்

**சிறு வினா விடை**

1.சிறிய நீர்நிலைகளையும் கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.
**சிறிய நீர்நிலை கடக்க :**
தோணி ,ஓடம் ,படகு,புணை,மிதவை,தெப்பம்
**கடல்களைக் கடக்க:** கலம் ,வங்கம்,நாவாய்
2.பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றிக் கூறுக.
காற்றின் திசை அறிந்திருந்தனர்.கடலில் காற்று வீசும் திசை , நீரோட்டங்களின் திசை அறிந்து கப்பலைச் செலுத்தினர்.திசைக் கருவி மற்றும் விண்மீன்களின் நிலையை அறிந்து கப்பலைச் செலுத்தினர்.கோள்களின் நிலையை வைத்துப் புயல் , மழை, கடல் நீர் பொங்கும் காலும் அறிந்து கப்பலைச் செலுத்தினர்.
3.கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை?
தண்ணீரால் பாதிப்பு ஏற்படாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர். வேம்பு , இலுப்பை , புன்னை , தேக்கு , வெண் தேக்கு மரங்களைப் பயன்படுத்தினர். மரங்களையும் பலகைகளையும் இணைக்க இடையே தேங்காய் நார் (அல்லது)பஞ்சு ஆகியவற்றில் ஒன்றை வைத்து ஆணிகளை அறைந்தனர்.சுண்ணாம்பையும் சணலையும் அரைத்து எண்ணெய் கலந்து அடிப்பகுதியில் பூசினர்.மரஆணிகளைப் பயன்படுத்தினர்.

**சிந்தனை வினா**

1.இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.
நீண்ட காலப் பயணம்,அதிகப் பயணச் செலவு,புயல்,சுனாமி போன்ற காரணங்களால் இக்காலத்தில் மக்கள் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளவில்லை.

**விரிவானம் : ஆழ்கடலின் அடியில்**

**'ஆழ்கடலின் அடியில்' கதையைச் சுருக்கி வரைக.**

**முன்னுரை**
'ஆழ்கடலின் அடியில்' என்ற கதையினைச் சுருக்கிக் காண்போம்.

**பயணம்**
கடலில் உலோகத்தால் ஆன உடம்பு கொண்ட ஒரு விலங்கு கடலில் செல்வோரைத் தாக்கியது. அதனைக் கண்டுபிடித்து அழிக்க பியரி , ஃபராகட், நெட், கான்சீல் ஆகியோர் கொண்ட குழு போர்க்கப்பலில் செல்கின்றது. மூன்று மாதங்களாகத் தேடியும் அந்த விலங்கு கிடைக்கவில்லை. ஒரு நாள் அந்த விலங்கு இவர்களின் கப்பலைத் தாக்கி,தூக்கி வீசியது.

**நீர்மூழ்கிக் கப்பல்**
அது நீர் மூழ்கிக் கப்பல் என்பதை அறிந்தனர். அவர்களை வீரர்கள் சிறைபிடித்தனர். அந்தக் கப்பல் பெயர் நாட்டிலஸ் , அதன் தலைவர் நெமோ , இக்கப்பலை அறிந்த உங்களை வெளியில் அனுப்ப முடியாது. இங்கே தான் நீங்களும் இருக்க வேண்டும் என்றார்.

**கப்பல் இயக்கம்**
கப்பலில் மிகப்பெரிய நீர்த்தொட்டி உள்ளது. அதனை நிரப்பும் போது கப்பல் கடல் அடியிலும் நீர் வெளியேறும் போது மேல் செல்கின்றது. கப்பல் மேலே வரும் பொழுது காற்றுச் சேகரிக்கும் என்றார நெமோ.

**மணல் மாட்டிய கப்பல்**
மணல் திட்டில் கப்பல் சிக்கயது. தீவில் காய்கறி வாங்கி வரச்சென்றனர். காய்கறிகள் வாங்கிக் கொண்டு திரும்பும் போது தீவில் உள்ளவர்கள்



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

துரத்தினார்கள். மாட்டாமல் கப்பல் வந்து சேர்ந்தனர். கடலுக்கடியில் அவர்கள் செல்லும் போது , முத்துக்குளித்துக் கொண்டிருந்த இந்தியர் சுறாவிடம் இருந்து காப்பாற்றினர்.

**முடிவுரை**

சுழலில் கப்பல் மாட்டிக் கொண்டது. மூவரும் தூக்கிவீசப்பட்டனர். நார்வே நாட்டு மீனவர் குடிசையில் இருந்தனர். நெமோவும் கப்பலும் என்ன ஆனது என்று தெரியவில்லை.

**கற்கண்டு : இலக்கிய வகைச் சொற்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல்--------- **விடை:இயற்சொல்**

2.பலபொருள் தரும் ஒரு சொல் என்பது------- **விடை: திரிசொல்**

3.வடமொழி என்று அழைக்கப்படும் மொழி------ **விடை : சமஸ்கிருதம்**

**பொருத்துக.**

1)இயற்சொல் - சோறு
2)திரிசொல் - அமுதம்
3)திசைச்சொல் - பெற்றம்
4)வடசொல் - இரத்தம்

**குறுவினாவிடை**

1.மண் ,பொன் என்பன எவ்வகைச் சொற்கள்?
**பெயர்இயற்சொல்** வகைச் சொற்கள் ஆகும்.

2.இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
1. **பெயர் இயற்சொல்** 2. **வினை இயற்சொல்** 3. **இடை இயற்சொல்** 4. **உரி இயற்சொல்**

3.குங்குமம் ,கமலம் என்பன எவ்வகை வடசொற்கள்?
தற்சமம் வகை வடசொற்கள் ஆகும்.

**சிறு வினாவிடை**

1.இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும் ?அவை யாவை?
இலக்கிய வகைச் சொற்கள் நான்கு வகைப்படும்.
இயற்சொல் ,திரிசொல் ,திசைச்சொல் ,வடசொல்

2.திரிசொல்லின் வகைகள் குறித்து விளக்குக.
பெயர் , வினை , இடை , உரி ஆகிய நான்கு நிலையில் வரும்.ஒரு பொருள் குறித்த பல திரிசொல் , பல பொருள் குறித்த ஒரு திரிசொல் எனவும் இருவகைப்படுத்தலாம்.

3.பண்டிகை,கேணி என்பன எவ்வகைச் சொற்கள்? விளக்குக.
பண்டிகை , கேணி என்பன திசைச் சொற்கள் ஆகும்.
பண்டிகை , கேணி ஆகிய சொற்கள் வடமொழி தவிர பிறமொழிகளிலிருந்து வந்த சொற்கள் திசைச்சொற்கள் ஆகும்.

**கட்டுரை எழுதுக.**

**பயணங்களின் பலவகை**

**முன்னுரை**

ஏதேனும் ஒரு காரணத்திற்காக ஒருவர் மற்ற இடத்திற்குச் செல்வது பயணம் ஆகும்.பயணத்தில் பல வகை உள்ளது.

**பயணத்தின் தேவை**

பொருட்களை வாங்கவும் விற்கவும் தம் உறவினர் மற்றும் நண்பர்களைத் தொடர்பு கொள்வதற்கும் , மருத்துவதற்கும் பயணத்தின் தேவை ஏற்பட்டது.

**வகைகள்**

பயணத்தின் தன்மைக் கேற்ப தரைவழிப்பயணம் , கடல்வழிப்பயணம் ,வான்வழிவழிப் பயணம் என வகைப்படும்.

**தரைவழிப்பயணம்**

தரைவழிப்பயணமே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மாட்டு வண்டி , குதிரை வண்டியின் மூலம் நடைபெற்ற தரைவழிப் பயணம். பின்னர் மிதிவண்டி , பேருந்து , தொடர்வண்டி ஆகியவை மூலம் மேற்கொள்ளப்பட்டது.

**கடல்வழிப்பயணம்**

கப்பலில் கடல்வழியாகச் செல்லும் பயணம் கடல்வழிப்பயணம் ஆகும். தீவுகள் மற்றும் வெகு தொலைவு நாடுகளுக்குப் பொருட்களை அனுப்பவும் , வெளி நாடுகளுக்கு வணிகம் செய்யவும் கடல் வழிப் பயணம் பயன்பட்டது.

**வான்வழிப் பயணம்**

விமானம் மூலம் வான்வழியில் பயணம் செல்வது வான்வழிப்பயணம் ஆகும்.தரை மற்றும் கப்பல் வழி பயணங்களை விடச் சிறந்தது வான் வழிப்பயணம் . வெளிநாடுகளுக்கு ஒருசில மணி நேரங்களிலேயே செல்லலாம். .

**முடிவுரை**

பயணம் செய்வதில் மிகுந்த கவனம் தேவை. மகிழ்ச்சியுடன் பயணம் செய்யுங்கள்

**இயல் - 2**

**கவிதைப்பேழை : இன்பத்தமிழ்க் கல்வி**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்துஎழுதுக.**

1.பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது--------- **விடை: மயில்**

2.பின்வருவனவற்றுள் ‘மலை’யைக் குறிக்கும் சொல் **விடை : வெற்பு**

3.‘ஏடெடுத்தேன்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது----**விடை : ஏடு+ எடுத்தேன்**



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

4. 'துயின்றிருந்தார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது----**விடை :துயின்று +இருந்தார்**

5.என்று +உரைக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது-------- **விடை : என்றுரைக்கும்**

**பொருத்துக.**

1.கழனி – வயல்
2.நிகர் – சமம்
3.பரிதி – கதிரவன்
4.முகில் – மேகம்

**குறுவினா விடை**

1.பாரதிதாசனின் மனதைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?

வானம் ,நீரோடை ,தாமரை ,காடு ,வயல் ,மேகம் , தென்றல் .மயில்,அன்னம் ,கதிரவன்

2.தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்?

அறியாமை களையும் துன்பங்கள் நீங்கும்,நெஞ்சில் தூய்மை உண்டாகும், வீரம் வரும்.

**சிறுவினா விடை**

1.'இன்பத்தமிழ்க் கல்வி' – பாடலின் மையக்கருத்தை நும் சொந்த நடையில் எழுதுக.

பாரதிதாசன் கவிதை எழுத ஏட்டினை எடுத்தார். வானம் நீரோடை , தாமரை ,காடு , வயல் ,மேகம் ஆகியன தங்களைக் கவிதையாக எழுதும் படி கேட்டது. பெண்கள் அன்பைக் கவிதையாக எழுதும் படிக் கூறினர். தென்றல் , மயில் ,அன்னம் , கதிரவன்.வீரர்கள் ஆகியனவும் அவரிடம் கவிதை எழுத வேண்டின.

ஆனால் துன்பத்தில் கிடக்கும் தமிழ்நாட்டு மக்கள் அறியாமை களைய, துன்பங்கள் நீங்க,நெஞ்சில் தூய்மை உண்டாக, வீரம் வளர தமிழ்க் கல்வி கற்க வேண்டும்.

**சிந்தனை வினா**

தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் ஏற்படும் நன்மைகளாக நீங்கள் கருதுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

நன்கு பாடம் புரியும்.தமிழின் மரபு காக்கப்படும். நற்சிந்தனை பெருகும்.தமிழ் உணர்வு அதிகமாகும்.சுயமாக சிந்திக்க உதவும்.பகுத்தறிவு பெருகும்.

**கவிதைப் பேழை : அழியாச் செல்வம்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம்----------- **விடை : கல்வி**

2.கல்வியைப் போல் --------- செல்லாத செல்வம் வேறில்லை. **விடை: விலையில்லாத**

3.'வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----. **விடை : வாய்த்து + ஈயின்**

4.'கேடில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----. **விடை : கேடு+ இல்லை**

5.எவன் + ஒருவன் என்பதனைசட சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்------. **விடை : எவனொருவன்**

**குறுவினா விடை**

1.கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.

குவித்து வைத்தாலும் பிறரால் திருடமுடியாது. கொடுத்ததலும் குறையாது. அரசராலும் கவர முடியாது.

**சிறுவினா விடை**

1.கல்விச்செல்வம் குறித்த நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

கல்வியை குவித்து வைத்தாலும் பிறரால் திருடமுடியாது. கொடுத்ததலும் குறையாது. அரசராலும் கவர முடியாது. சேர்த்து வைக்கவேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகாது.

**சிந்தனை வினா**

1.கல்விச்செல்வம் அழியாத செல்வம் எனப்படுவது ஏன் ? – சிந்தித்து எழுதுக.

கல்விச்செல்வம் நீரால் அடித்துச் செல்ல முடியாது.தீயால் எரிக்க முடியாது.திருடர்களால் திருடமுடியாது. மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தாலும் குறையாது.எனவே, பிற செல்வங்கள் அழியும். ஆனால்கல்விச் செல்வம் அழியாதது ஆகும்.

**உரைநடை உலகம் : வாழ்விக்கும் கல்வி**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்துஎழுதுக.**

1.காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம்- **விடை :காலம் அறிதல்**

2.கல்வியில்லாத நாடு ------------ வீடு. **விடை : விளக்கில்லாத**

3.'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் **விடை : பாரதியார்**

4.'உயர்வடைவோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது--- **விடை:உயர்வு+அடைவோம்**

5.இவை + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது----------- **விடை :இவையெல்லாம்**

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1.**செல்வம்**- கல்விச்**செல்வம்** சிறந்த செல்வம்.

2.**இளமைப்பருவம்** –
**இளமைப்பருவத்தில்** கல்விகற்க வேண்டும்.

3.**தேர்ந்தெடுத்து** –
**தேர்ந்தேடுத்து சொற்களைப் பேச வேண்டும்.**



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**குறுவினா விடை**

1.மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் உள்ள வேறுபாடு யாது?

எதிர்காலத்தில் பிற உயிரினங்கள் என்னவாகும் என்பதைச்சொல்ல முடியும் . ஆனால், மனிதப்பிறவியின் எதிர்காலத்தைக் கூறவே முடியாது.

2.கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?

கல்வி அறிவு இல்லாதவர்கள் விலங்குகள்.

3.நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?

நன்கு ஆழ்ந்து ,ஆராய்ந்து தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும்.

**சிறுவினா விடை**

1.கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.

25ஆண்டுக்கு முன் இருந்த ஆலமரம் புயலில் விழுந்துவிட்டது.பெரிய கட்டடம் மழையால் இடிந்து விட்டது என்பர்.அன்று 2 இலட்சம் ரூபாய் வைத்திருந்தவர். இன்று இரண்டு ரூபாய் கடன் கேட்கிறார் என்போம்.

எல்லாம் அழியும் .ஆனால் கல்வி அழியாதது.

2.கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

கல்வி ஓர் ஒளிவிளக்கு. ஒருவன் கற்றுவிட்டால் , அப்படிப் பலருக்கும் ஒளி தருவது தான் கல்வி. கல்வி இல்லாத நாடு விளக்கில்லாத வீடு. வீடு இருட்டாக இருக்கும். அதுபோல் கல்வி இல்லாத குடும்பத்தை யாரும் மதிக்கமாட்டார்கள்.

சிந்தனை வினா

நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன யாவை?

நல்ல கருத்தைச் சொல்ல வேண்டும்.விழிப்புணர்வு கருத்துகளைச் சொல்ல வேண்டும்.வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகளைக் கூறவேண்டும்.

**விரிவானம் : பள்ளி மறுதிறப்பு**

**மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை**

'பள்ளி மறுதிறப்பு' சிறுகதையைச் சுருக்கமாகக் காண்போம்.

**நண்பர்கள்**

மதிவாணனும் கவினும் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். கோடைவிடுமுறையில் பின்னலாடை நிறுவனத்திற்கு வேலைக்குச் சென்றனர்.பள்ளி மீண்டும் திறக்க இரண்டு நாட்கள் தான் இருந்தது.

**பேருந்து நிறுத்தம்**

வேலைக்குச் செல்ல பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டு இருந்தனர். கவின் தான் மீண்டும் பள்ளிக்குப் போவதில்லை .வாராவாரம் சம்பளம், வீட்டில் யாரும் திட்டுவதில்லை.இது போதும் என்றான். மதிவாணனும் சற்றே குழம்பினான்.

**மதிவாணன் மனம்**

விளம்பரப் பலகையில் அம்பேத்கரும் அப்துல் கலாமும் தெரிந்தனர். இவரைப் போல உயர வேண்டும் என்றால் படிப்பு தேவை.படிக்க வேண்டிய வயதில் வேலை எதற்கு? என்பதை நன்கு உணர்ந்தான்.

**படிக்காதவர் நிலை**

பேருந்து நிறுத்தத்தில் முதியவர் ஒருவர். அங்கிருந்த சிறுவர்களிடம் , இந்தப் பேருந்து நல்லூர் செல்லுமா ? எனக் கேட்டார். படிக்காததால் அங்கிருந்த சிறுவர்கள் பதில் சொல்லவில்லை.பெரியவர் படிக்காததால் அவரையும் கிண்டல் செய்கின்றனர்.

**மனமாற்றம்**

மதிவாணன் அவரிடம் நல்லூர் இது போகாது. போகும் பேருந்து வரும் போது சொல்கின்றேன் என்றான்.இதையெல்லாம் பார்த்து கல்வி தான் தலைநிமிரச் செய்யும் என்பதை உணர்ந்து, பள்ளியை நோக்கி நடந்தான் மதிவாணன்.

**முடிவுரை**

இளமையில் கல்வி கற்க வேண்டும்.படிக்கிற பருவத்தில் வேலைக்குச் செல்லக்கூடாது.

**கற்கண்டு**

**ஒரெழுத்து ஒரு மொழி , பகுபதம் , பகாப்பதம்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.நன்னூலின் படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை---**விடை :42**

2.'எழுதினான்' என்பது **விடை : வினைப் பகுபதம்**

3.பெயர்ப்பகுபதம்--- வகைப்படும். **விடை :ஆறு**

4.காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு-----------

**விடை : இடைநிலை**

**பொருத்துக.**

1.பெயர்ப் பகுபதம் - பெரியார்

2.வினைப் பகுபதம் - வாழ்ந்தான்

3.இடைப் பகாப்பதம் - மன்

4.உரிப் பகாப்பதம் - நனி

சரியான பகுபத உறுப்பை எழுதுக.

| | |
|---|---|
| போவாள் - போ + வ் + ஆள் | நடக்கின்றான் - நட+ க் +கின்று+ ஆன் |
| போ - <u>பகுதி</u><br>வ் - <u>எதிர்கால இடைநிலை</u><br>ஆள் - <u>பெண்பால் வினைமுற்று விகுதி</u> | நட - <u>பகுதி</u><br>க் - <u>சந்தி</u><br>கின்று - <u>நிகழ்கால இடைநிலை</u><br>ஆன் - <u>ஆண்பால் வினைமுற்று விகுதி</u> |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

பின்வரும் சொற்களைப் பிரித்துப் பகுபத உறுப்புகளை எழுதுக.

| | |
|---|---|
| 1.பார்த்தான் - பார் + த் + த் ஆன் | 2.பாடுவார் - பாடு+ வ் +ஆர் |
| பார்- பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி | பாடு - பகுதி<br>வ் - எதிர்கால இடைநிலை<br>ஆர் - ஆண்பால் வினைமுற்று விகுதி |

**குறுவினா விடை**

1.ஓரெழுத்து ஒருமொழி என்றால் என்ன?

ஓர் எழுத்து பொருள் தரும் சொல்லாக அமைவது ஓரெழுத்து ஒருமொழி ஆகும்.

எ.கா. தா,நீ,வா

2.பதத்தின் இருவகைகள் யாவை?

பகுபதம் , பகாப்பதம்

3.பகுபத உறுப்புகள் எத்தனைவகைப்படும்? அவை யாவை?

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

பகுதி , விகுதி ,இடைநிலை ,சந்தி , சாரியை , விகாரம்.

**சிறு வினா விடை**

1.விகுதி எவற்றைக் காட்டும்?

திணை ,பால் ,முற்று ,எச்சம்

2.விகாரம் என்பது யாது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

பகுதி , விகுதி , சந்தி , இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.

(எ.கா.) கடிந்த - கடி+த+ந் +த்+அ

3.பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பெயர்ப்பகுபதம் ஆறு வகைப்படும்.

1.பெயர் பெயர்ப்பகுபதம் 2.இடப் பெயர்ப்பகுபதம் 3.காலப் பெயர்ப்பகுபதம் 4.சினைப் பெயர்ப்பகுபதம் 5.பண்புப் பெயர்ப்பகுபதம் 6.தொழில் பெயர்ப்பகுபதம்

**கடிதம் எழுதுக.**

**உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையாளருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

-------------,(பெயர்)

தமிழ்நகர்,

ஈரோடு.

**பெறுநர்**

ஆணையர் அவர்கள்,

பொதுநூலகத் துறை,

சென்னை - 600 002.

**மதிப்பிற்குரிய ஐயா,**

**பொருள் : நூலகம் அமைத்துத் தர வேண்டுதல்.**

வணக்கம்.எங்கள் தமிழ் நகர் ஈரோட்டில் அமைந்து உள்ளது. இங்கு1000 குடும்பங்கள் வசிக்கின்றனர். எங்கள் பகுதியில் நூலகம் இல்லை. அறிவை வளர்த்துக் கொள்ள எங்களால்இயலவில்லை.எனவே எங்கள் எங்கள் பகுதியில் நூலகம் அமைத்துத் தருமாறு பணிவுடன் வேண்டுகின்றோம். நன்றி!

நாள் : இப்படிக்குத்

இடம் : ஈரோடு. தங்கள் உண்மையுள்ள,

--------------

உறைமேல் முகவரி

பெறுநர்

ஆணையர் அவர்கள்,

பொதுநூலகத் துறை,

சென்னை - 600 002.

**இயல் - 3**

**கவிதைப் பேழை : ஒரு வேண்டுகோள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.மயிலும் மானும் வனத்திற்கு --------தருகின்றன.

**விடை :வனப்பு**

2.மிளகாய் வற்றலின் --- தும்மலை வரவழைக்கும்.

**விடை : நெடி**

3.அன்னை தான் பெற்ற -------சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறாா். **விடை :மழலையின்**

4.'வனப்பில்லை' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

**விடை : வனப்பு+ இல்லை**

5.'வார்ப்பு+ எனில்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது---- **விடை : வார்ப்பெனில்**

**நயம் அறிக.**

ஒரே எழுத்திலோ ஓசையிலோ முடியும் இயைபுச்சொற்களைப் பாடலில் இருந்து எடுத்து எழுதுக.

1.பிரும்மாக்**களே** - சேர்ப்பவர்**களே**

2.உடைப்ப**வனின்** - உழ**வனின்**

3.சிகரங்**களா** - அலை**களா** - காடு**களா** - பள்ளத்தாக்கு**களா** - தோட்டங்**களா**

4.வன**ப்பில்லை** - உயிர்**ப்பில்லை**

**குறுவினா விடை**

**1.தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை?**

அன்பும் பாசமும் நிறைந்திருக்க வேண்டும்.

**2.ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?**

மானுடம் இல்லாத எந்த அழகும் அழகன்று. மனிதன் கலக்காத எதிலும் உயிர்ப்பில்லை.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

சிறுவினா விடை

சிற்பங்களும் ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

பாறை உடைப்பவரின் சிலையைச் செதுக்கினால் , வியர்வை நாற்றம் வீசவேண்டும். உழவரின் வார்ப்பெனில் , ஈரமண்ணின் மணம் வீச வேண்டும். தாய் ஓவியத்தை வரைந்தால் , அன்பும் பாசமும் நிறைந்திருக்க வேண்டும்.சிறு குழந்தையின் ஓவியத்தில் பால் மணம் வீச வேண்டும்.

சிந்தனை வினா

நீங்கள் ஒரு கலைஞராக இருந்தால் எத்தகைய படைப்புகளை உருவாக்குவீர்கள்?

நான் ஒரு ஓவியக்கலைஞராக இருந்தால் மனித நேயம், விழிப்புணர்வு ,அன்பு,இரக்கம் ஏற்படுத்தும் ஓவியங்களையும் சமுதாய முன்னேற்றத்திற்கான ஓவியங்களையும் உருவாக்குவேன்.

**கீரைப்பாத்தியும் குதிரையும்(இரட்டுறமொழிதல்)**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.'ஏறப் பரியாகுமே' என்னும் தொடரில் 'பரி' என்பதன் பொருள்--------- **விடை :குதிரை**

2.பொருந்தாத ஓசை உடைய சொல்---------- **விடை : திரும்புகையில்**

3.'வண்கீரை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது--------- **விடை : வண்மை+ கீரை**

4. கட்டி + அடித்தல் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்---- **விடை : கட்டியடித்தல்**

சிறுவினா விடை

கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

| கீரைப்பாத்தி | குதிரை |
|---|---|
| 1.மண்கட்டிகளை அடித்துத் தூளாக்குவர். | 1.வண்டிகளில் கட்டி , அடித்து ஓட்டப்படும். |
| 2.மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்திகளாக்கி வைத்திருப்பர். | 2.கால் மாறி மாறிப் பாய்ந்து செல்லும். |
| 3.வாய்க்காலில் மாறி மாறி நீர்ப்பாய்ச்சுவர். | 3.எதிரிகளை மறித்துத் தாக்கும். |
| 4.நீர் கடைமடையின் இறுதிவரை சென்று மாற்றிவிடத் திரும்பும். | 4.போக வேண்டிய இடம் முழுதும் சென்று மீண்டும் திரும்பி வரும். |

**சிந்தனை வினா**

நீங்கள் எவற்றைக் குதிரையோடு ஒப்பிடுவீர்கள்?

நான் குதிரையையும் கடிகாரத்தையும் ஒப்பிடுவேன். குதிரை மற்றும் கடிகாரம் ஆகிய இரண்டும் ஓடும், நிற்கும்,பார்க்கும்.

**உரைநடை உலகம் : பேசும் ஓவியங்கள்**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட்ட பொருள்களில் ஒன்று **விடை:மண்துகள்**

2.நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் --**விடை : கேலிச்சித்திரம்**

3.'கோட்டோவியம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----**விடை : கோட்டு + ஓவியம்**

4.'செப்பேடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது--------- **விடை : செப்பு +ஏடு**

5.எழுத்து +ஆணி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்---------**விடை : எழுத்தாணி**

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1.கருத்துப்படங்களைஅறிமுகப்படுத்தியவர்------- **விடை :பாரதியார்**

2.கலம்காரி ஓவியம் என்றுஅழைக்கப்படுவது---- **விடை :துணி ஓவியம்**

3.மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் ---------------மீது பொறித்துப் பாதுகாத்தனர். **விடை :செப்பேடுகளில்**

**குறுவினா விடை**

1.ஓவியங்களின் வகைகள் யாவை?

1.குகை ஓவியம் 2.சுவர் ஓவியம் 3.துணி ஓவியம் 4.ஓலைச்சுவடி ஓவியம் 5. செப்பேட்டு ஓவியம் 6.தந்த ஓவியம் 7.கண்ணாடி ஓவியம் 8.தாள் ஓவியம் 9.கருத்துப்பட ஓவியம் 10.நவீன ஓவியம்

2.குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?

குகை ஓவியங்களில் இருந்து செய்திகளை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காக குகைகளில் ஓவியம் வரைந்ததை அறியலாம்.

3.தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?

கரிக்கோல் , நீர் வண்ணம் , எண்ணெய் வண்ணம்

4.சுவர்ஓவியங்கள் காணப்படும் இடங்களைக்கூறுக.

அரண்மனைகள் ,மண்டபங்கள் , கோவில்கள் ஆகியவற்றின் மேற்கூரைகளிலும் சுவர்களிலும் சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களாகும்.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

5.செப்பேட்டு ஓவியங்களில் காணப்படும் காட்சிகள் யாவை?
நீர்நிலைகள் , செடிகொடிகள் , பறவைகள் , விலங்குகள் , குறியீடுகள்.

**சிறுவினா விடை**

1.கேலிச்சித்திரம் என்றால் என்ன?
மனித உருவங்களை நகைச்சுவை தோன்றும் படி வரைவதைக் கேலிச்சித்திரம் என்பர்.

2.ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.
ஓலைச்சுவடிகளில் கோட்டோவியமாகவும் வண்ணப்பூச்சு ஓவியமாக வரைவர். இவை பெரும்பாலும் புராண , இதிகாசக் காட்சிகளைக் கொண்டு இருக்கும்.

**சிந்தனை வினா**
தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவது ஏன்?
கேரளாவில் யானைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. வயது முதிர்ந்த யானைகளும் , தந்தங்களும் கேரளாவில் அதிகம் காணப்படுகின்றது. எனவே, தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுகின்றது.

**விரிவானம் : தமிழ் ஒளிர் இடங்கள்**

நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால் . சுற்றுலாக் கையேடு என்னும் பகுதியில் உள்ள இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

தஞ்சை சரசுவதி மகால் நூலகம் இது தான். இந்தியாவில் உள்ள பழமையான நூலகம் இது. பலமொழிகளில் ஓலைச் சுவடிகள் கையெழுத்துப் படிகள் இங்கு உள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகம் இது. 1981ல் தமிழுக்காகத் தொடங்கப்பட்ட பல்கலைக் கழகம். வானத்தில் இருந்து பார்க்கும் போது தமிழ்நாடு என்ற பெயர் தெரியும் படி கட்டடங்கள் இருக்கின்றன.

கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை. தமிழக அரசு இதனை நிறுவியது. வள்ளுவர் சிலை 133 அடி உயரத்தில் உள்ளது.

**கற்கண்டு : தொழிற்பெயர்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற் பெயர் எது? **விடை : படித்தல்**
2.பின்வருவனவற்றுள் முதனிலை திரிந்த தொழிற் பெயர் எது? **விடை: ஊறு**

**பொருத்துக.**

1.ஒட்டகம் - விகுதி பெற்ற தொழிற்பெயர்
2.பிடி - முதனிலைத் தொழிற்பெயர்
3.சூடு - முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

சிறுவினா விடை

1.வளர்தல் ,பேசுதல் - இவை எவ்வகைப் பெயர்கள் ? விளக்கம் தருக.
வளர்தல் , பேசுதல் - இவை விகுதி பெற்ற தொழிற் பெயர்கள் . 'தல்' என்ற தொழிற்பெயர் விகுதி பெற்று வருவதால் இஃது விகுதி பெற்ற தொழிற் பெயர்கள் ஆயிற்று.

2.முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
முதனிலைத் திரிவதால் உருவாகும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆகும்.
சான்று : விடு - வீடு

**கட்டுரை எழுதுக.**
தலைப்பு : எங்கள் ஊர்

**முன்னுரை**
எங்கள் ஊர் ஈரோடு ஆகும். பல வளங்கள் இருக்கும் இடம் ஈரோடு. அச்சிறப்புமிகு ஊர் பற்றிக் காண்போம்.

**அமைவிடம்**
ஆறுகளும் காடுகளும் வயல்களும் ஈரோட்டைச் சுற்றி அமைந்துள்ளது.வற்றாத காவிரி ஆறு பாயும் ஊர் ஈரோடு ஆகும்.

**பெயர்க்காரணம்**
ஈர்+ஓடை. இரண்டு நீரோடைகள் ஓடுவதால் ஈரோடை எனப்பெயர் பெற்றது.இதுவே காலப்போக்கில் மாறி ஈரோடு என்று ஆனது.

**தொழில்கள்**
வேளாண்மை , கைத்தறி , ஜமக்காளம் , மஞ்சள் வணிகம் ஆகிய தொழில்கள் ஈரோட்டில் சிறந்து விளங்கிவருகின்றது.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**சிறப்புமிகு இடங்கள்**

பெரியார் - அண்ணா நினைவகம் , திண்டல் முருகன் கோயில் , பிரப் தேவாலயம் , பள்ளிபாளையம் தர்கா . பண்ணாரி அம்மன் கோவில் , வ.உ.சி. பூங்கா ஆகியன ஈரேட்டில் சிறப்புமிகு இடங்கள் ஆகும்.

**திருவிழாக்கள்**

மாரியம்மன், பண்ணாரி அம்மன் , பாரியூர் அம்மன் , அறச்சாலை அம்மன் ஆகிய கோயில்களின் திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படும். திரளான பக்தர்கள் இதில் கலந்து கொள்வர்.

**மக்கள் ஒற்றுமை**

இந்து , இஸ்லாம் , கிறித்துவம் ஆகிய சமயங்கள் எங்கள் நகரில் இருந்த போதும் மக்கள் அனைவரும் ஒற்றுமையாகவே இருந்துவருகின்றனர். ஒரே பகுதியில் கோயில் , பள்ளிவாசல் ,தேவாலயம் ஆகிய மூன்றும் அமைந்து மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றது.

**முடிவுரை**

நம் ஊரின் சிறப்பினை அறிந்து , ஊரைக் காத்து வளப்படுத்துவது நம் கடமையாகும்.

**வாழ்வியல் -திருக்குறள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.--------- தீமை உண்டாக்கும்.
**விடை :செய்யத் தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்**

2.தன் குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புவரிடம் -இருக்கக் கூடாது. **விடை:சோம்பல்**

3.'எழுத்தென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது----- **விடை:எழுத்து + என்ப**

4. 'கரைந்துண்ணும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது---**விடை:கரைந்து + உண்ணும்**

5.கற்றனைத்து+ ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது **விடை : கற்றனைத்தூறும்**

**பொருத்துக.**

1.கற்கும் முறை - பிழையில்லாமல் கற்றல்
2.உயிர்க்குக் கண்கள் - எண்ணும் எழுத்தும்
3.விழுச்செல்வம் - கல்வி
4.எண்ணித் துணிக - செயல்
5.கரவா கரைந்துண்ணும் - காகம்

**குறுவினா விடை**

1)'நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும்' எப்போது?

பண்பை அறிந்த ஒருவருக்கு நன்மை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தீமை வந்து சேரும்.

2)தீமை உண்டாக்கும் இரண்டு செயல்கள் யாவை?

தீய செயல்களைச் செய்வதாலும் நல்ல செயல்களைச் செய்யாமல் விடுவதாலும் தீமை உண்டாகும்.

3)துன்பத்தில் துன்பம் உண்டாக்குபவர் யார்?

துன்பத்தில் கலங்காதவர்,அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதனை வென்று விடுவர்.

**ஆக்கம்**
**ச.சேட்டு மதார்சா,**
**தமிழாசிரியர்,**
**ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா**
**உயர்நிலைப் பள்ளி,**
**ஈரோடு-1**
**அலைபேசி :8883681115**



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593